**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.8/2022 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | பவானி | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை 23.08.2023**

நான் இந்த வழக்கில் என் மைனர் மகன் கமலேஷ் என்பவரின் பாதுகாவலர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். 1 முதல் 17 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்

1. ம.சா.ஆ.1 - 12.08.2020 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல்.
2. ம.சா.ஆ.2 - 22.12.2020 தேதியிட்ட குற்றப்பிரிவு மாற்று அறிக்கை ஜெராக்ஸ் நகல்.
3. ம.சா.ஆ.3 - 12.08.2020 தேதியிட்ட பிரேத பரிசோதனை ஜெராக்ஸ் நகல்.
4. ம.சா.ஆ.4 - 12.08.2020 தேதியிட்ட விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல்.
5. ம.சா.ஆ.5 - 22.08.2020 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
6. ம.சா.ஆ.6 - 14.10.2020 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
7. ம.சா.ஆ.7 - 13.03.2021 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
8. ம.சா.ஆ.8 - முதல் எதிர்மனுதாரரின் ஆர்.சி.புத்தகம் ஜெராக்ஸ் நகல்.
9. ம.சா.ஆ.9 - முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு ஜெராக்ஸ் நகல்.
10. ம.சா.ஆ.10 - ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல்.
11. ம.சா.ஆ.11 - முதல் மனுதாரரின் ஆதார் அட்டை மற்றும் மைனர் மகனின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது)
12. ம.சா.ஆ.12 - 22.12.2020 தேதியிட்ட காயச்சான்று ஜெராக்ஸ் நகல்

13. ம.சா.ஆ.13 - 01.09.2020 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல்.

14. ம.சா.ஆ.14 - 13.08.2020 முதல் 23.03.2021 வரை மருத்துவமனையில் செலவிடப்பட்ட மொத்த தொகைக்கான பட்டியல் அசல்.

15. ம.சா.ஆ.15 (23 வரிசை) - 12.10.2020 தேதியிட்ட மருத்துவ செலவினம் அசல்

16. ம.சா.ஆ.16 (42 வரிசை) - 12.08.2020 முதல் 23.03.2021 வரை மருத்துவ செலவினம் அசல்

17. ம.சா.ஆ.17 (13 வரிசை) - போக்குவரத்து செலவினம் அசல்

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**MCOP.No.8/2022 P.W.1- பவானி 18.12.2024**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த நபர் யார் என்றால் என் கணவர் ஆவார். நான் எனக்காகவும், என் பிள்ளைகள், என் மாமியாருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என் கணவருக்கு விபத்து சமயத்தில் வயது 38 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவர் வேலை செய்து வந்தார் என்றும், மாத வருமானம் பெற்று வந்தார் என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்த முருகனின் சகோதரரும் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சாலையின் குறுக்கோ நடந்தது என்றால் சரிதான். என் கணவர் முருகன் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்தார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் விபத்து சமயத்தில் என் கணவர் தலைகவசம் போட்டிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு என் கணவர் தலைகவசம் போட்டிருந்தால் இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களை தடுத்திருக்கலாம் என்றால் சரிதான். என் கணவருடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் என் மகன் உட்கார்ந்து சென்றார் என்றால் சரிதான். இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் இன்னார் என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. இந்த விபத்தை ஏற்படுத்திய நபர் இன்னார்தான் என்று ஊர்ஜிதம் ஆகாத நிலையில் நான் 2ம் எதிர்மனுதாரர் மீது இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த விபத்து முழுக்க, முழுக்க என் கணவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றும், முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர்தான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று, வாகனத்தை கவனக்குறைவாக திருப்பும்போது விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை